MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# நாலடியாரில் கல்விச் சிந்தனைகள்

முனைவர் **இரா. வனிதாமணி**
உதவிப் பேராசிரியர்.தமிழ்த் துறை
குயீன்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
புனல்குளம், புதுக்கோட்டை
கைபேசி : 9597007538
மின்னஞ்சல்: vanithamanichandrabose@gmail.com

# NAALADIYARIL KALVI SINTHANAIKAL

**Dr R. VANITHAMANI,**
ASSISTANT PROFESSOR IN TAMIL
QUEENS COLLEGE OF ARTS & SCIENCE FOR WOMEN
PUNALKULAM PUDUKKOTTAI CELL.9597007538
Mail Id; vanithamanichandrabose@gmail.com

## ABSTRACT

Tamil is one of the word's ancient classical languages. Rich in values. Artistic beauty. And profound moral teachings. Tamil literature is globally celebrated for isdepth. Our tamil language and its literature are filled with timeless wisdom that humanity.From ancient times.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

Tamil literary works have emphasized moral livind. discipline. spiritual values. Righteous conduct. Self-control compassion. Vegetarianism. And charity. All these virtues uphold a holistic and righteous way of life. Tamil ethical texts have been continuously teachind such values for thousands of years.These values are still relevant in today's word and continue save as guiding principles. Many Tamil moral texts lay out life lessons essential for a principled life. Among them the thoughts Tamil sages stand out as especially significant.

**KEYWORDS**

**Moral instruction, Aesthetics, Medicine, virtue, spiritual values…**

**ஆய்வுச்சுருக்கம்**

உலகச் செம்மொழி இலக்கியங்களில் தன்னிகரற்ற மொழியாகத் திகழ்வது தமிழ் மொழியாகும். அம்மொழியில் தொன்மையான இலக்கண இலக்கிய நூல்கள் சிறந்து விளங்குகின்றன. சங்க இலக்கிய நூல்களில் காதல், வீரம், போர் அரசாட்சி முறை இடம்பெற்று இருந்தாலும் மனிதனின் நெறிப்பட வாழ்வதற்கு தேவையான வாழ்வியல் நெறிகளும், தத்தவங்களும் பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் இன்றைய நவீன உலகத்திற்கும் ஏற்றாற்போல் அறக் கருத்துக்கள் இயற்றப்பட்டு உள்ளன. அறத்தின் வழியிலும் மனித மாண்பின் இன்பமுடன் வாழ்வதற்கு செறிந்த கருத்துக்கள் நாலடியாரில் இடம்பெற்று உள்ளன. அவ்வகையில் நாலடியாரில் இடம்பெற்றுள்ள கல்விச் சிந்தனைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றன.

**திறவுச்சொற்கள்**

**கல்வி.அழகு.மருந்து.நூல்கள்.தகுதி.ஆகியவை ஆகும்.**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**முன்னுரை**

சங்க கால நூல்களுக்கு தோன்றிய சங்கம் மருவிய கால நூல்கள் ஆகும். அவற்றுள் 11 அற நூல்களும், 6 அக நூல்களும், 1 அகம் புறம் சார்ந்த நூல்களும் இடம்பெற்று உள்ளன. அவ்வகையில் 11 அற நூல்களும் நாலடியாரில் குறிப்பிடப்பட்டுள்ள கல்விச் சிந்தனைகள். கல்லாமையால் ஏற்படும் வாழ்வியல் மாற்றங்கள் சார்ந்த கருத்துக்களை இக்கட்டுரையில் காணலாம்.

திருக்குறள் போன்றே அறக்கருத்துக்கள் சிறப்பாக இடம்பெற்றுள்ள நூல் நாலடியராகும். இந்நூலை நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி, பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் – இந்த இரண்டு தொடர்களும் நாலடியாரின் பெருமையையும் திருக்குறளின் சிறப்பையும் நன்கு காட்டுகின்றன.

குறள் வெண்பாக்களால் ஆகிய நூலுக்குக் “குறள்” என்ற பெயர் ஏற்பட்டாற்போல் நாலடி வெண்பாக்களாகிய நூலுக்கு நாலடி எனப் பெயர் அமைந்தது. நாலடியார், நாலடி, நானூறு, வேளான் வேதம் என்றெல்லாம் இந்நூலக்கு பெயர் உண்டு. இந்நூலை இயற்றியவர்கள் சமண முனிவர்கள் ஆகும். அவர்களுக்கும் நாலடியார் நூலுக்கும் ஓர் வரலாற்றுக் கதையும் உண்டு.

தமிழகத்திலே, கள்ளுண்ணலும் புலால் உண்ணலும், பரத்தையர் உறவும், மற்றும் சிலபலப் பழக்கங்களும் நிலவியதைக் கண்ட சமணச் சான்றோர்கள், தவ வாழ்வினரான முனிவர்கள், அதனை விடுத்தால் தமிழ்ச் சமூகம் சிறப்பாக இருக்கும் என்ற எண்ணத்தின் பயனே அந்நூலாகும். திருக்குறளைப் போன்றே முப்பாலாகப் பிரித்து வகைப்படுத்தி உள்ளனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

கல்வி என்பது ஒருவன் தன் வாழ்வின்கண் செப்பமாகத் தெளிந்த அறிவுடன் நடந்துகொள்வதற்கு உதவும். தகுதியுடைய நூல்களைக் கற்றலைக் குறிப்பதாகும்.கல்வியாவது தத்தம் தொழிலுக்கு ஏற்ற அறிவுகளைப் பெருக்கிக் கொள்ளவும் உண்மை உணர்வதற்கான விளக்கக் கூறுகளை கேட்டுக் கற்றும் அறிதலும், அங்ஙனம் அறிந்தபின் அவற்றைப் பிறருக்குத் தான் வகுத்துக்கூற வல்லவனாதலும் ஆகும்.

கல்வி கற்பதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காகப் பற்றி இழித்துரைக்கும் பாடல்கள் எல்லாம் மிகச் சிறந்தவை. கல்லாதவனுக்குக் காட்டும் உவமாணங்கள். படிப்போருக்கு நகைப்பை ஊட்டும்.

**“கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து**
**நல் அறிவாளர் இடைப்பு”[1]**

கல்வி கற்காமல் மரம்போல நீண்டு வளர்ந்த ஒருவன் நல்ல அறிஞர்கள் நடுவில் இருப்பதற்கு தகுதி அற்றவன் என்பதை அறிய முடிகிறது.

## கல்வியில் உண்டாகும் மெய்யுணர்வு

கல்வியை அனைவரும் கற்றல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். கல்வி, கல்லாமை, கேள்வி அறிவுடைமை சொல்வன்மை ஆகிய அதிகாரங்களில் கல்வியின் சிறப்பை கூறுகிறார். மனிதன் அவசியம் கல்வி கற்றல் வேண்டும். கற்காதவர்களை விலங்குகள் என்றே அழைப்பர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

சங்க காலத்தில் கல்வி என்பது அரசர் அந்தணர்க்கே உரியது என்பதில் திருவள்ளுவருக்கு உடன்பாடு கிடையாது.

கணக்கு முதலானது கல்வியை எண் என்றும் இலக்கியம் முதலான இன்ன பிறவற்றை எழுத்து என்றும் இவ்விரு கல்வியும் அனைவருக்கும் வேண்டும் என்றும் சுட்டிக் காட்டுகின்றார். கற்றலுடன் நிற்காமல் வழி நடத்தல் வேண்டும். தணிந்து பணிந்தேனும் கற்றல் வேண்டும். கல்விக்கு முடிவே கிடையாது. அழிவில்லாத செல்வம் கல்வி என்று வள்ளுவர் கூறுகின்றார்.

**கல்வியே சிறந்த அழகு**

நம் முன்னோர்கள் வாழ்ந்த மரபுகள் அவர்களுடைய சிறந்த எண்ணங்கள் மற்றும் வாழ்வின் செப்பத்திற்கான பற்பல தெளிந்த முடிவுகள் அனைத்தும் தருவது கல்வி. இது மற்றைய அழகை விட மேன்மைப்பெறுகின்றது.

**“குறிஞ்சி அழகும், கொடுத்தானை கோட்டழகும்**

**மஞ்சள் அழகும் அழகல்ல, நெஞ்சத்து**

**நல்லமயாம் என்னும் நடுவு நிலைமையால்**

**கல்வி அழகே அழகு”** [2] **-** என்றும்

**“டெழுத்தின் வனப்பே வனப்பு”**[3] - என்றும்

**“நுண்மான் நுழை புலம் இல்லான் எழில் நலம்”**[4]

- - என்றும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**“மண்மாண் புனைபாவை யற்று**

**சொல்லின் வனப்பே வனப்பு**

**கல்விக்கழகு கசடற மொழிதல்”[5]**

என்ற பாடல்கள் வழியாக உணர முடிகிறது.

தன்னுடைய தலைமயிரினை அழகாகப் புணைந்து கொள்வதனாலே பெறுகின்ற அழகும் உடலினை வளைந்து கொண்டதாக விளங்கும் ஆடையினது கரைகளால் ஏற்படுகின்ற அழகும் நல்ல மணம் வீசும் பூச்சுக்களை உடலிலே பூசிக்கொள்வதனால் ஏற்படும் அழகும் உமையான அழகு அல்ல. தம்முடைய நெஞ்சத்திலே நாம் நல்லவர்கள் என்ற உறுதியினைத் தருகின்ற கல்வியினால் ஏற்படும் அழகே அழகாக அமைகின்றன.

**கல்வியே மருந்து**

மனிதன் தன் வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்த்துத் தனக்கு ஏற்படும் அறியாமை என்னும் நோயை போக்குவதற்கும் கல்வியே சிறந்த மருந்தாகும்.

**“இம்மை பயக்குமால் ஈமக் குறைவின்றால்**

**தம்மை விளக்குமால் தாமுளராக் கோடின்றல்**

**எம்மை உலகத்தும் யாங்காணேம் கல்விபோல்**

**மம்மர் அறுக்கும் மருந்து”[6]**

- என்பதாகும்.

கல்வியானது இம்மை என்று சொல்லப்படும் இந்த பிறவியின் பயனாகிய உறுதி பொருள்களையும் தரும். செல்வத்தைப்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

போலல்லாமல் கொடுக்க கொடுக்கக் குறைவு படாமல் மென்மேலும் வளர்ந்துகொண்டே போகும். தாம் உயிருள்ளவராக வாழும் அளவும் கல்வி அழிதல் இல்லாது நிலைபெற்றுத் தம்முடன் விளங்கும். ஆகையால் கல்வியைப் போல அறியாமையாகிய நோயை ஒழிக்கின்ற ஒரு மருந்தினை யாம் உலகத்தில் கண்டதில்லை என்று நாலடியார் கூறுகின்றார்.

கல்வி, அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும். பிற செல்வங்களோ அவற்றை மறைத்து அறியாமையை வளர்ப்பன. ஆகவே கற்றல் மிகவும் சிறப்புடையது என்பது சாலச்சிறந்தது ஆகும்.

**கல்வியால் உயரும் தகுதி**

மனிதர்களிடையே மனதளவில் எத்தனையோ ஒற்றுமை, வேற்றுமை இருந்தாலும் கல்வி கற்கும்போது அனைவரும் ஒன்றே என்ற எண்ணம் வந்து விடுகிறது. தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும் கல்வியில் சிறந்து விளங்கினால் அவர்களே உயர்ந்தவர்கள்.

**“களர் நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்**

**விளைநிலத்து நெல்லின் விழுமிதாக்கொள்வாக**

**கடைநிலத்தோர் ஆயினும் கற்றறிந் தோரைத்**

**தலை நிலத்து வைக்கப் படும்**”[7] - என்றும்

**“கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்**

**மற்றையர்தம் என்றும் மதியாரே”**[8] என்றும்

**“கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்**

**நெல்லினும் பிறந்த பதராகுமே**”[9] - என்றும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**"நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்**

**கற்றல னாயிற் கிழிருப்பவனே"**[10] - என்றும்

**"எக்குடிப் பிறப்பினை யாவரே யாயின**

**அக்குடியிற் கற்றோர் மேல்வரு கென்பர்"**[11]

என்ற பாடல் வரிகள் நமக்கு புலப்படுத்துகின்றன.

**அழிவில்லாதக் கல்வி**

கல்வியானது தான் வைக்கப்பட்டுள்ள இடத்தினின்றும் பிறரால் களவாட முடியாது. கொள்பவர் உயர்ந்த தகுதியை அடைவர். கல்வியை பெற்றவரின் வாழ்வில் வளர்ச்சி இருக்குமேத் தவிர அழிவு இருக்காது. பிறரால் அபகரிக்கவும் முடியாதது கல்வி. தன் பிள்ளைகளுக்கு சொத்து சேர்ப்பதைவிட கல்வி செல்வத்தை அவர்களுக்கு அளிப்பது சிறந்ததாகும். இதனை.

**"வைப்புழிக் கோட்படா, வாய்த்தீயின் கேடிலில்லை**

**மிக்க சிறப்பின் அரசர் செறின்"**[12]

- என்பதாகும்.

**கல்விக்கு முடிவில்லை**

கரையில்லா முடிவில்லா கடல்போல் பரந்து விரிந்து இருப்பது கல்வி மட்டுமே. அவற்றை கற்பது வாழ்நாட்களில் சிலவே ஆகும். பாலினைப் பிரித்து நீரிணை பிரிக்கும் அண்ணம்போல் சான்றோர்கள் நல்ல நூல்களை வாழ்நாள் முழுவதும் படித்துக்கொண்டே இருப்பவர்களை நாம் பார்க்கின்றோம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**“கல்விக்கரையில கற்பவர் நாள்சில**

**மெல்ல நினைக்கின் பிணைபல தெள்ளிதன்**

**.... .... .... ......... நூல் கற்ற**

**மகன்றுணையா நல்ல கொளல்”[13]**

- என்பதாகும்.

**நூல்களை தேர்வு செய்தல்**

தமிழ் இலக்கியங்களில் இலக்கண, இலக்கிய நூல்கள் செறிந்து விளங்குகின்றன. அளவு மிகுந்த நூற்களினுள்ளே உண்மையான பயன்படுகின்ற நூல்களை மட்டுமே படிப்பதெல்லாம் நல்ல உயர் குடியில் பிறந்தாரின் அழகாகும். நல்ல நூல்களை படிப்பதனால் வாழ்வியலில் ஏற்படுகின்ற துன்பங்களை களைவதற்கும் தடுமாற்றத்தை நீக்கிக்கொள்ளும் தன்மையை அறிந்தவர்கள் நல்ல நூல்களை கற்பவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகின்றனர்.

**“அலகுசால் கற்பின், அறிவு நூல் கல்லாது**

**உலகு நூல் ஓதுவது எல்லாம் – கல கல**

**கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்**

**போ ஒந் துணையறிவார் இல்”[14]** - என்றும்.

**“முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு**

**தந்தையும் தாயும் வழிபட்டு...**

**கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும் காமுற்ற”[15]**

- என்பதாகும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

## முடிவுரை

இவ்வாறாக. மனித வாழ்வினை செம்மைப் படுத்துவதற்காக அற இலக்கியங்கள் இயற்றப்பட்டாலும் அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை இன்றைய காலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களும் கற்றுக் கொண்டுள்ளனர். அற இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கல்விச் சிந்தனைகளில் கல்வியின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளன. கல்லாமையால் வரும் துன்பங்களையும் அதன் இடர்பாடுகளையும் நாலடியாரின் வழி காண முடிகிறது.

சான்றோர்களின் முதன்மை தன்மையும், கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவமும் அதனால் வரும் துன்பங்களை கல்வியின் வழி அறிய முடிகிறது. ஆகையால் சங்க காலம் முதல் அற இலக்கிய காலம் வரையிலும் கல்வி முக்கியத்துவம் அடைந்து இருப்பதனை நாம் இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. இன்றளவும் கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை உணர்ந்துக்கொள்ள முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. நாலடியார், பாடல். 254
2. மேலது, பா.131
3. சிறுபஞ்ச மூலம், 37
4. ஏலாதி, பா.74
5. திருக்குறள், 407.
6. நான்மணிக்கடிகை, 63.
7. வெற்றி வேங்கை, 62
8. நாலடியார், பா.32
9. மேலது, பா.14

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

10. நன்னெறி, பா.35
11. நறுந்தொகை, பா.36
12. மேலது, பா.37
13. மேலது, பா.38
14. நாலடியார், பா.134
15. மேலது, பா.135

**துணைநூற் பட்டியல்**

1. எஸ். கௌமாரீஸ்வரி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு, மார்ச்.2009.
2. நாலடியார் தெளிவுரை, புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.
3. நான்மணிக்கடிகை புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.
4. திரிகடுகம் புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.
5. சிறுபஞ்சமூலம் புலியூர் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம்.